06–11–2025
O.S.No. 1/2022

வா. சா. 1 சாந்தி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

1ம் பிரதிவாதி எனது மாமியார். என் மாமனார் பெயர் காமாட்சி. அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் இறந்த பின் ரூ.17,22,598/– வைப்பீடு செய்த வகையில் கிடைத்த வட்டி ரூ.2 லட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.19,22,598/– ஐ 1ம் பிரதிவாதி எங்களுக்கு செலுத்திவைக்கவேண்டுமென வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகையில் 1ம் பிரதிவாதிக்கு எந்த பங்கும் இல்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முழு தொகைக்கும் உரிய நீதிமன்றக்கட்டணத்தை நான் கட்டியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் மேற்படி தொகையில் எனக்குரிய பாகத்தை பிரித்து தரவேண்டும் என நீதிமன்றக்கட்டணம் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்குரிய பங்குத்தொகையை நான் பிரித்துக்கொடுக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இல்லை. ஏனெனில் அவர்களுக்கு நிலம், வீடு உள்ளது. மேலும் வட்டிக்கு கொடுத்தும் சம்பாதித்து வருகிறார்கள். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். சொத்துக்கள் என் மாமனார் பேரிலும் அவரது பூர்வீகச் சொத்துக்களும் இருக்கிறது. அந்த பூர்வீகச்சொத்துக்களில் என் கணவருக்குரிய பாகத்தை கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பூர்வீகச் சொத்துக்களில் எங்களுக்கு பாகம் வேண்டாமென நாங்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. இந்த வழக்கில் கண்ட தொகையை மட்டும் எனக்கு கொடுத்தால் போதும். சொத்து எதுவும்

வேண்டாம். இவ்வழக்கில் கண்ட முழு தொகையும் எங்களுக்கு கொடுத்துவிட்டால் நான் பூர்வீகச்சொத்துக்களில் எனக்குள்ள பாகத்தை கோரமாட்டேன். மேற்படி விவரத்தை பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கரூர் அரசு மருத்துவக்கல்லூரியில் செவிலியராக பணியாற்றி வருகிறேன். 2009 ம் ஆண்டு பணியில் சேர்ந்தேன். 2010 ல் திருமணமானது. திருமணத்திற்கு பின்னர் நாங்கள் இருவரும் ஈரோட்டில் வசித்து வந்தோம். அங்குதான் இரண்டு குழந்தைகளும் பிறந்தார்கள். அங்கு இருக்கும்போதுதான் என் கணவர் விபத்தில் இறந்துவிட்டார். என் கணவர் 31.07.2019 ம் தேதி விபத்தில் இறந்தார். விபத்து சம்மந்தமாக நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஈரோட்டில் இருக்கும் போது என் மாமியார் எங்களுடன் இருந்தார்களா என்றால் அவ்வப்போது வந்து போவார்கள். என் கணவர் எல்ஐசி பாலிசி மட்டும்தான் எடுத்திருந்தாரா என்றால் என் கணவரின் வங்கி கணக்கில் ரூ.85000/-இருந்தது. அதை நானும் என் மாமியாரும் கையெழுத்து போட்டு பெற்றுக்கொண்டோம். என் பெயரில் காசோலையாக கொடுத்தார்கள். அப்போது என் மாமியார் என்னுடன் நல்ல உறவில் இருந்தார். அந்த பணத்தை எடுத்து அவரது பாகத்தை கொடுத்து விட்டேன். எல்ஐசி பாலியில் நாமினியாக என் மாமியாரை காட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த நாமினி என்ற அடிப்படையில் தான் என் மாமியாருக்கு ரூ.17,22,598/- வங்கியில் செலுத்தப்பட்டுள்ளது என்றும் மீதித்தொகை வரவேண்டியுள்ளது என்றும் சொன்னால் சரிதான். இன்னும் எவ்வளவு தொகை வரவேண்டியுள்ளது என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. ஏன் இன்னும் மீதி தொகை வராமல்

இருக்கிறது என்றால் என் கணவரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் இதர ஆவணங்களை கேட்டார்கள். நான் என் மாமியார் பெற்ற தொகையை எங்களுக்கு கொடுக்காததால் நான் ஆவணங்களை கொடுக்கவில்லை. நான் ஆவணங்களை கொடுக்காததால்தான் எல்ஜசி பாக்கி தொகை கொடுக்கப்படாமல் உள்ளது என்றால் சரிதான். எனது கணவரது அனைத்து அசல் ஆவணங்கள் என் வசம்தான் உள்ளது என்றால் சரிதான். என் பிள்ளைகளுக்குரிய பாகத் தொகையை 1ம் பிரதிவாதி செலுத்த தயாராக இருக்கிறார் என்றால் அவ்வாறு என்னிடம் அவர்கள் சொல்லவில்லை. நான் வீம்பாக என் கணவரது ஆவணங்களை ஒப்படைக்காததால்தான் முழுத்தொகையையும் பெற முடியாததால் என் பிள்ளைகளுக்குரிய பாகத்தொகையை 1ம் பிரதிவாதி கொடுக்க முடியாமல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. உரிய ஆவணங்களை நான் சமர்ப்பித்து மீதி தொகையை 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப் பெற்றவுடன் 1ம் பிரதிவாதி என் குழந்தைகளுக்குரிய பாகத் தொகையை செலுத்த தயாராக இருந்து வருகிறார் என்றால் அதற்கு எனக்கு சம்மதம்தான். தாவா முழுத்தொகையும் எங்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும் அந்த தொகையில் 1ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றும் சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

இறந்துபோன சாந்தகுமார் 3 பாலிசிகளை 3ம் பிரதிவாதியிடம் எடுத்த விவரம் எனக்குத் தெரியும். அந்த பாலிசிகளில் எனது கணவரின் அம்மா பகவதியை நாமினியாக நியமனம் செய்துள்ளார் என்றால் சரிதான். என் கணவர் இறந்த பிறகு என் மாமியாரை நாமினியாக காட்டியிருந்ததால் அவர் உரிய ஆவணங்களை 3ம் பிரதிவாதியிடம்

சமர்ப்பித்த காரணத்தினால் 1ம் பிரதிவாதி வங்கி கணக்கில் பாலிசி தொகையை செலுத்தினார்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியைப் பொறுத்து நீதிமன்றத் தீர்ப்புக்கு கட்டுப்படுவார் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.11.06 16:22:55 +0530

Principal District Judge,
Dindigul.